<u>தேதி - 22.08.2022 **Prob.O.P.No**.3/2018 எ.சா.1 (லலிதா)</u>

<u>மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை தொடர்ச்சி</u>

எனது தாயார் கடந்த 01.04.1967 ம் தேதியிட்ட கிரையப்பத்திரத்தின் மூலம் மதுரை பங்கஜம் காலனி, பிளாட் எண்.47 ஐ கிரையம் வாங்கினார் அதன் பின்பு எனது தாயார் தனது சொந்த பணத்தில் இருந்து மேற்படி காலியிடத்தில் கட்டிடங்கள் கட்டி அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். மனுதாரர், 2ம் எதிர்மனுதாரர்களின் கடன்களை அடைக்க வேண்டி வளையங்குளத்திலுள்ள பூர்வீகச் சொத்தினை விற்று அடைத்தார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றும், அதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளேனா என்றால் வைத்திருக்கிறேன் தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன். எனது தாயாருக்கு மதுரை பாரதி இருதய சிகிச்சை மையத்தில் மருத்துவர் புவனேஷ்பாபு சிகிச்சை செய்த விபரத்தையும், மருத்துவர் மகேஷ்பாபு அளித்த சிகிச்சை விபரத்தையும், அரோமா மருத்துவமனையில் அளித்த சிகிக்சை விபரத்தினையும், எதிர்உரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. மேற்படி விபரங்களை எனது நிரூபணவாக்குமூலத்தில் பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது தாயார் 28.02.2018 ம் தேதியன்று இறந்தார். அவர் உயிருடன் இருந்த காலத்தில் தான் சிகிச்சை அளித்திருக்க முடியும் என்றால் சரிதான். எனது நிரூபணவாக்குமூலத்தில் 21.12.2018 முதல் 24.02.2018 வரை சிகிச்சை அளித்ததாக விபரம் உள்ளது என்றால் சரிதான். அது தட்டச்சுப்பிழை. எனது தாயார் இறந்த பின்பு 21.01.2016 ம் தேதியிட்ட உயில்படி அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். 21.01.2016 ம் தேதியிட்ட உயிலானது என் அண்ணன் சந்திரபிகாஷ்-யிடம் சொல்லி பதியப்பட்ட உயில் ஆகும். மேற்படி உயிலைப் பற்றிய விபரம் எனது தாயார் இறந்த பின்பு தெரிய வந்தது. எனது தாயார் இறந்த பின்பு 30 நாட்கள் கழித்து எனது சகோதர, சகோதரிகள் முன்னிலையில் எனது தாயாருக்கு சாமி கும்பிடும் போது உயிலைப் பற்றிய விபரம் தெரிய வந்தது. மேற்படி உயிலானது என் உடன்பிறந்தவர்களான ஐந்து பேர்களான கல்யாணி, மல்லிகாதேவி, லலிதா, சாந்தி என்ற ஜான்சிராணி, ரவீந்திரன் ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்டது. எ.சா.ஆ.12 முதல் 18 வரையிலான வீட்டுவரிஇரசீதுகளில் தாயார் பெயரான காசியம்மாள் என்று மட்டுமே உள்ளது. அதில் வரி செலுத்தியவர் பெயரில் எனது பெயர் இல்லை என்றால் சரிதான். எ.சா.ஆ.12 முதல் 18 வரையிலான வீட்டுவரிஇரசீது ஆவணத்தின்படி வீட்டுவரியை மனுதாரர் தான் செலுத்தினார் என்று சொன்னால் சரியல்ல. எ.சா.ஆ.3 ஆன உயில் ஆவணத்தில் என்னுடைய ஆயுளுக்கு பின்னர் உயிலானது நடைமுறைக்கு வர வேண்டியது என்றும், என் ஆயுள் உள்ளவரை மேற்படி உயிலை இரத்து செய்யவோ, மாற்றி அமைக்கவோ உரிமை உள்ளது என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

எ.சா.ஆ.3 ஆன உயிலை எழுதியதற்கு பிறகு அதை மாற்றி எழுதுவதற்கு வாய்ப்புகள் உண்டு என்றால் சொன்னால் வாய்ப்புகள் இல்லை. எ.சா.ஆ.3 ஆவணத்திற்கு பிறகு 31.01.2018ம் தேதியிட்டு ஒரு உயில் ஆவணத்தை எனது தாயார் எழுதி வைத்தார் என்றால் சரியல்ல. எ.சா.ஆ 3 ல் 2ம் பக்கத்தில் என் கணவர் ஜீவந்தராக இருக்கும் போது R.சந்திரபிரகாஷ், R.ஞானசேகர் ஆகியோருக்கு வேறு உயில் சாசனம் வேறு சொத்து கொடுத்துவிட்டார் என்று உள்ளது என்றால் சரிதான். அந்த வேறு உயிலில் ரவீந்திரனுக்கு சொத்து கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் ரவீந்திரனுக்கு சொத்து கொடுக்கப்ப்டட விபரத்தை எ.சா.ஆ.3 ஆவணத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எ.சா.ஆ.3 உயிலானது என்னுடைய ஆலோசனையின் பெயரில் தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அதில் வேண்டுமென்றே ரவீந்திரன் பெயர் விடுபட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எ.சா.ஆ.3ல் 8ம் பக்கத்தில் 028-005-474 என்ற மின்இணைப்பு ஜான்சிராணி என்ற பெயரில் இருந்தது என்றால் முன்பு இருந்தது. 028-005-476 என்ற மின்இணைப்பு ஞானசேகரன் பெயரில் உள்ளது என்றால் சரிதான். 028-005-1373 என்ற மின்இணைப்பு மனுதாரர் பெயரில் உள்ளது என்றால் சரிதான். நானும், 6ம் எதிர்மனுதாரரும் ஒரே வழக்கறிஞரை வைத்து தான் ஆரம்பகாலத்தில் வைத்து நடத்தி வந்தோம். ஆரம்பகாலத்தில் நானும், 6ம் எதிர்மனுதாரரும் தனித்தனியாக இருப்பதாக காண்பிப்பதற்காக வேறு வேறு வழக்கறிஞரை நியமித்தோம் என்று சொன்னால் சரியல்ல. 6ம் எதிர்மனுதாரருக்கு ஆரம்பத்தில் ஜெகதீசன் வேலாயுதம் என்பவரை நியமித்திருந்தோமா என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. இந்த மனு நிலுவையில் இருக்கும் போது 29.09.2020-ம் தேதியன்று மனுதாரருக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் சரிதான். அதில் என்னுடைய சொத்து எனக்கு வேண்டும் என்று கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். நான் படித்து பார்த்தால் தான் வேறு என்ன அனுப்பினேன் என்ற விபரம் எனக்குத் தெரியும்.

குறுக்குவிசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.